# மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
# நீலகிரி மாவட்டம்

அறிவிக்கை எண் : DLSA/01/2025 நாள் :31.01.2025

## அறிவிப்பு

ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம், உதகமண்டலத்தில், செயல்பட்டு வரும் நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில், உறுப்பினராக பணிபுரிய கீழ்க்கண்ட பொதுப் பயன்பாட்டு சேவைத் துறைகளில் பணியாற்றிய அனுபவமுள்ள நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

1. பயணிகள் அல்லது பொருட்களை விமானம், சாலை, நீர் போக்குவரத்து மூலம் கொண்டு செல்வதற்கான போக்குவரத்து சேவை
2. தபால், தந்தி அல்லது தொலைபேசி சேவை
3. பொதுமக்களுக்கு மின்சாரம்,, ஒளி அல்லது நீர் வழங்குதல்
4. பொது பாதுகாப்பு அல்லது சுகாதார அமைப்பு
5. மருத்துவமனை அல்லது மருந்தக சேவை
6. காப்பீட்டு சேவை
7. கல்வி அல்லது கல்வி நிறுவனங்கள்
8. வீட்டுவசதி மற்றும் ரியல் எஸ்டேட்

விண்ணப்பதாரர்கள் மேற்கண்டத் துறைகளில் போதுமான அனுபவம் பெற்றவர்களாகவும், 62 வயதிற்க்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும்.

ஒரு அமர்வுக்கு 2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மதிப்பூதியம் வழங்கப்படும். மேற்கண்ட பணிக்கு விண்ணப்பிக்க விரும்பினால் கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்தை சுயமாக பூர்த்தி செய்து

பதிவு தபால் மூலம் "தலைவர் /மாவட்ட நீதிபதி, மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு, உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்– 643006" என்ற முகவரிக்கு 07.02.2025 அன்று மாலை 5 மணிக்குள் கிடைக்கும்படி நேரிலோ தபால் மூலமோ விண்ணபிக்க வேண்டும். தாமதமாக வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கல்வி, வயது மற்றும் பணிபுரிந்த துறை ஆகியவற்றுக்கான சான்றுகள் இணைக்கப்பட வேண்டும்.

மாதிரி படிவம் https://nilgiris.dcourts.gov.in/ என்ற இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

தலைவர்/ மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
நீலகிரி மாவட்டம்

நாள் : 31.01.2025
இடம் : உதகமண்டலம்

D. no. 188/25